

அரியலூர் மாவட்டம் தா.பழூர் கிழக்கு ஒன்றியக் கழகம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தொகுத்து எழுதிய மொழிப்போர்த் தியாகி, மக்கள் தொண்டர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கணேசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீட்டு விழா என மாபெரும் முப்பெரும் விழா, மாவட்டச் செயலாளர், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் சா.சி.சிவசங்கர் முதல் நூலை வெளியிட்டார். அந்நூலை க.சொ.க.குடும்பத்தினர் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாலதி க.சொ.க.கண்ணன், க.ஆதித்தியா, க.மதுமிதா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் விழா சிறப்புரையாற்றினார்கள். உடன் திராவிடர் கழக பொதுச்செயலாளர் முனைவர் துரை.சந்திரசேகர், கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், திராவிடர் கழக நிர்வாகள், தோழமைக் கட்சியினர் பலரும் கலந்துகொண்டனர்.



ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி சார்பில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற கே.இ.பிரகாஷ் எம்.பி., மாநில இளைஞரணி துணைச் செயலாளர், மாநகரச் செயலாளர் சுப்பிரமணியம், மாவட்டப் பொருளாளர் ப.க.பழனிசாமி, நகரமன்ற உறுப்பினர் பி.ராமச்சந்திரன் மண்டலத் தலைவர் வி.சி.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர் செல்லபொன்னி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் சாதிக், காங்கிரஸ் சார்பில் மாமன்ற உறுப்பினர் ஜாபர் சாதிக், தி.மு.க. சார்பில் மாமன்ற உறுப்பினர் திருமதி. மேனகா, தலைமைக் கழகப் பேச்சாளர் இளைய கோபால், மண்டலத் தலைவர் காட்டு சுப்பு என்கிற சுப்ரமணியம், வார்டுச் செயலாளர்கள் மரபாலம் தண்டபாணி, கருங்கல்பாளையம் மகேஷ், அண்ணாதுரை, திருமதி ஃபாத்திமா சாகுல் மற்றும் கழக முன்னோடிகள் பலரும் திரளாக கலந்துகொண்டு வெற்றி பெற்றதற்கு நன்றியையும், மக்கள் குறைகளையும் கேட்டு அறியவும் ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஈரோடு கிழக்கு மற்றும் தெற்கு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள இடங்களுக்கு 03.03.2025 அன்று நன்றி அறிவிப்பு பயணம் மேற்கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் கம்பை நல்லூரில் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் இறந்த 3 பெண்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி தலா 4 லட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ. சதீஸ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் வழங்கினர்.

### தமிழ்நாடு பாதிக்கப்படக் கூடாது என முதல்வர் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்துகிறார்! தமிழ்நாட்டின் நலனுக்காக

# அரசியல் வேறுபாடுகளைக் களைந்து - அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ள வேண்டும்!

## செய்தியாளர் சந்திப்பில் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வேண்டுகோள்!

தூத்துக்குடி, மார்ச் 5 –

“தமிழ்நாடு பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் அனைத்து கட்சிக் கூட்டத்தை நடத்துகின்றார்! அரசியல் வேறுபாடுகளைக் களைந்து தமிழ்நாட்டின் நலனுக்காக அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ள வேண்டும்!” என கழக துணைப் பொதுச்செயலாளர் – நாடாளுமன்றக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் வேண்டுகோள் விடுத்தார்.

தி.மு.கழகத் துணைப் பொதுச்செயலாளர் – நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி அவர்கள் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பு குறித்த விபரம் வருமாறு:–

தொகுதி மறுசீரமைப்பு என்பது தமிழ்நாட்டைப் பாதிக்காத வகையிலே, தென்மாநிலங்களைப் பாதிக்காத வகையிலே, முக்கியமாக மக்கள்தொகையைக்கட்டுப்படுத்திய மாநிலங்களைப் பாதிக்காத வகையிலே செய்யப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுப்பி இருக்கின்றார்கள். அதற்காக அனைத்து கட்சி கூட்டத்தையும் அழைத்து இருக்கிறார்கள். வராத சில கட்சிகளிடம், கௌரவம் பார்க்காதீர்கள், இது தமிழ்நாட்டுடைய நலனை மையமாக கொண்ட ஒரு கூட்டம். அதனால் நம் உரிமைகளுக்காக இணைந்து நாம் குரல் கொடுக்க வேண்டும். அதனால் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக தமிழ்நாட்டு நலனைப் பலி கொடுக்காதீர்கள் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பு என்பது தமிழ்நாட்டைப் பாதிக்கக்கூடாது என்ற முதலமைச்சருடைய கருத்துக்கு சமீபத்தில் தமிழ்நாடு வந்த உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள், PRO RATA அடிப்படையில் மறுசீரமைப்பு நடக்கும், தமிழ்நாட்டிற்கு தொகுதிகள் குறையாது எனச் சொல்லி இருந்தார்.



இது தெளிவைத் தருவதற்குப் பதிலாகப் பல குழப்பங்களை உருவாக்கி இருக்கிறது. ஏனென்றால், இதுவரை எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிதான் ஒவ்வொரு முறையும் தொகுதி மறுசீரமைப்பு நடந்துள்ளது. அதாவது மக்கள்தொகை அடிப்படையில்தான் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற உணர்வு நாடு முழுவதும் உருவாக்கப்பட்ட பிறகு, 1971 ஆம் ஆண்டுக்கு பிறகு, மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பும் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.

சில மாநிலங்கள் இந்த மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதை முக்கியமாக எடுத்துக்கொண்டு, அதில் வெற்றி பெற்று இருக்கிறார்கள். பல மாநிலங்கள் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் சீரிய முறையில் கவனம் செலுத்தவில்லை; அந்த மாநிலங்களில் மக்கள் தொகை அதிகரித்து இருக்கிறது.

அப்படிப்பட்ட சூழலில் மக்கள் தொகையை குறைத்து இருக்கக்கூடிய மாநிலங்கள் பாதிக்கப்பட கூடாது. இந்த இரண்டு விதமான மாநிலங்களுக்கு இடையே சீரான நிலை வரும் வரை, தொகுதி மறுசீரமைப்பு நிறுத்தி வைக்கப்பட்ட வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகு அந்த இட ஒதுக்கீடு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. அதுபோல், நாடாளுமன்றதிலே பல கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர்களும் பல முறை மறுசீரமைப்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் தொகுதி மறுசீரமைப்பு தமிழ்நாட்டை பாதிக்கக்கூடாது என்பதற்காக முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்துகிறார்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், தமிழ்நாட்டிற்கு எண்ணிக்கை குறைக்கப்படாது, நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 39 என்கிற அதே அளவில் இருந்தாலும், மற்ற மாநிலங்களில், உ.பி. முதலான மாநிலங்களில் மக்கள் தொகை அடிப்படையில் அதிகமான எண்ணிக்கை தரப்பட்டால், அதுவும் நமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

தமிழ்நாட்டின் எம்பிக்களுடைய சதவீதம் 543ல் 7.18 சதவிகிதம் இருக்கிறோம். ஆனால் இப்படி மாறும்போது 5 5.7 சதவிகிதமாக மாற வாய்ப்புள்ளது. அதில் நாம் பெரிய அளவில் பாதிக்கப்படுவோம். தென் மாநிலங்கள் அதிக அளவில் பாதிக்கப்படும்.

இதைத்தான் நம் முதல்வர் மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். இதற்கு ஒரு தெளிவான பதிலை உள்துறை அமைச்சரோ ஒன்றிய அரசோ கூறவேண்டும். இது நியாயமான அச்சம். இதில் தெளிவு பெற்றால்தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும்.

தமிழ்நாடு பாதிக்கப்படாமல், தென்மாநிலங்கள் பாதிக்கபடாமல் தொகுதி மறுசீரமைப்பு பற்றி சரிசெய்வதற்கு பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகிறது. அதற்காகதான் முதலமைச்சர் அனைத்து கட்சி கூட்டத்தை அழைத்து இருக்கிறார்கள். அங்கே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படும். எது சரியாக எல்லாருக்கும் ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்றாக இருக்கிறதோ, அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். முதலில் விவாதம் நடக்க வேண்டும். அந்த விவாத்திற்கே சிலர் வர தயங்குகிறார்கள். பிஜேபியும் அங்கு வந்து நியாயமா வந்து அவர்களின் கருத்துக்களை சொல்லலாம்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் ஒருமித்த குரலை எழுப்பலாம். எல்லாருடைய கருத்தையும் கேட்டு, அதற்கான சரியான தீர்வைக் காண வேண்டும் என்பதே முதலமைச்சருடைய எண்ணம்; திமுக வினுடைய நிலைப்பாடு. தமிழ்நாடு, தென்மாநிலங்கள், மக்கள் தொகையைக் குறைத்து உள்ள தொகுதி மாநிலங்கள் மறுசீரமைப்பால் பாதிக்கப்படக் கூடாது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் திருமயம் வெ.மு சத்திரத்தில் மாபெரும் இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. இந்த இரத்ததான முகாமை மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் அண்ணாமலை ரகுபதி துவங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் சுதர்சன், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கோ.சதீஷ், மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகிகள் மருத்துவர் ராஜசேகரபாண்டியன், மருத்துவர் ராஜ் பிரியன், மருத்துவர் பாலமுரளி, மருத்துவர் கண்ணதாசன், ஜான் பிரிட்டோ, அமுல்ராஜ். திவ்யா, திருமயம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆறு.சிதம்பரம், இரா.கணேசன், முன்னாள் சேர்மன் சுப.துரைராஜா, மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் இரா.மேகநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருண் சேகர், ஜான் மீட்டர், பி.அண்ணாதுரை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இம்முகாமில் மருத்துவ அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் உட்பட 56 நபர்கள் இரத்ததானம் அளித்தார்கள்.

# தொகுதி மறுசீரமைப்பு: ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 5 –

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு எந்த அடிப்படையில் நடைபெறும் என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் ஞாயிற்றுக் கிழமைவெளியிட்டவிடியோ பதிவு :

கோவையில் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பில் தமிழகம் எந்த ஒரு தொகுதியையும் இழக்காது என்று கூறியுள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பில் தமிழகத்தின் மக்களவைத் தொகுதிகள் குறைய வாய்ப்பு இருக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் அமித்ஷா அவ்வாறு கூறியுள்ளார்.

அதேநேரம் விகிதாசார அடிப் படையில் தமிழகத்தின் தொகு திகள், அதே அளவில் இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விகிதாசார அடிப்படையில் என்றால், எந்த அடிப்படையில் என்று தமிழக பா.ஜ.க. தலைவர்களுக்குக்கூட தெரிய வில்லை. ஒன்றிய அரசுதான் விளக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு குறித்து முதல்வர் எழுப்பியுள்ள விவகாரம் தமிழகத்துக்கும், தென் மாநிலங்களுக்கும் மிக முக்கியமான பிரச்சினையாகும். ஒருவேளை மக்கள்தொகையின் அடிப்படையில் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டால், தமிழகம் 10 தொகுதிகள் வரை இழக்க வாய்ப்பு உள்ளது.

தென் மாநிலங்களும், இந்தியா வில் வேறு சில மாநிலங்களும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியுள்ளன.

ஆனால், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாத மாநிலங்கள் அதிக தொகுதிகளைப் பெறும் சூழல் உள்ளது. இதுவரை மக்கள் தொகை அடிப்படையில் தான் மறுசீரமைப்பு நடைபெற்று வந்துள்ளது. அதனால், மக்கள் தொகை அடிப்படையில் மறுசீரமைப்பு என்பது, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு அநீதியாகவே இருக்கும்.

எனவே, மறுசீரமைப்பு எந்த அடிப்படையில் மேற்கொள்ளப் பட உள்ளது என்பது குறித்து தெளிவு வேண்டும். இது தொடர்பாக ஒன்றிய அரசு, பிரதமர், உள்துறை அமைச்சர் தெளிவான அளிக்க வேண்டும். விளக்கத்தை மக்கள்தொகையை முறையாக கட்டுப்படுத்திய எந்த ஒரு மாநிலமும் அதனுடைய தொகுதிகளை இழக்காது என்கிற உறுதியையும் ஒன்றிய அரசு தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு மதுக்கரை நகராட்சி குரும்பபாளையம் கிராமத்தில் முதல் மதிப்பெண் பெற்ற ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் 250 மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு விழாவும் ஆயிரம் பேருக்கு அறுசுவை உடன் கூடிய அசைவ உணவினை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் வழங்கினார். இவ்விழாவில் நகர்மன்றத் துணைத் தலைவர் எ ரமேஷ் குமார் தலைமையில் நகரக் கழகச் செயலாளர் ராம்ஜி முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சல்மான்கான், கழகத்தின் மூத்த முன்னோடி குமாரசாமி, முன்னாள் நகர செயலாளர் ஆறுச்சாமி, டிடிசி செல்வராஜ், சுப்பிரமணியம் விஷ்ணு பிரபு மாணவரணி அமைப்பாளர் விக்னேஷ் சஞ்சய் ஐயப்பன் வினோத் ஷாம் பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., பீளமேடு பகுதி 1 திமுக,52 வது வட்டக்கழகம் சார்பில்,காவேட்டி நாயுடு லே அவுட் பகுதியில் நடைபெற்ற, கழகத் தலைவர் முதலமைச்சர் அன்புத் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, இளைஞர் எழுச்சி நாள் விழா,ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் கலந்து கொண்டு, கழக கொடியினை ஏற்றி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி ஏழை, எளிய மக்கள் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முன்னதாக கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் திருமதி.இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் தலைமையில், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கழக நிர்வாகிகள் அனைவரும் உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர்.